புதிய சர்க்கரை ஆலைகள்.

* வினா எண். 440—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் பகுதியில் சர்க்கரை ஆலை அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் பகுதியில் முன்னர் ஒரு திட்டத்தை, சர்க்கரை ஆலை நிறுவப்பட இருப்பதாக பொது மக்கள் நம்பக்கூடிய அளவிற்கு அரசு தரப்பில் பல செய்தித் தாள்களில் வெளி வந்திருந்தது.

(திரு. சி. ஆறுமுகம் இருக்கையில் உட்கார்ந்து பேசுதல்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இருக்கையில் உட்கார்ந்துகொண்டே பேசுங்கள். நீங்கள் அதற்கு பதிலளிக்க முற்பட வேண்டாம். அது அவருடைய வியாதி. என்ன மருந்து கொடுத்தாலும், குணப்படுத்தமுடியாது. (திரு. சி. ஆறுமுகம் பேச முற்படல்) உடனே விளக்கமா? தேவையில்லை, உட்காருங்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தங்களுடைய மேலான அனுமதியோடு முதலில் இருந்தே இதனைக் கேள்வியாகக் கேட்க விரும்புகிறேன். மாயூரம் பகுதியில் சர்க்கரை ஆலை ஒன்று நிறுவப்பட இருப்பதாக, பொது மக்கள் நம்பக்கூடிய அளவிற்கு அரசு தரப்பில் செய்திகள் செய்தித் தாள்களில் வெளியாகி இருந்தது. அதையொட்டி, அதற்கு ஏற்ற இடங்களை அதிகாரிகள்கூட நேரிடையாகப் பார்வையிடச் சென்றார்கள். அது குறித்து தொடர் நடவடிக்கையாக சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவ அரசு முன்வருமா? மேலும், இதற்கு முன்னர் இருந்த அரசு அங்கே ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைப்பதாக எடுத்துச் சொன்னார்கள். ஏதாவது ஒரு தொழிற்சாலையை தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக மாயூரம் பகுதியில் ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இலக்கை சர்க்கரை ஆலைகள் ஏற்கனவே எட்டி விட்டதாலும், தேவைக்கு அதிகமான அளவு

1979 மார்ச் 17]

உற்பத்தி இருப்பதாலும், தொழிலில் மந்த நிலை இருப்பதாலும். புதிய ஆலைகளை நிறுவுவதற்கு மத்திய அரசு அனுமதிக்கவில்லை. இந்த வகையில் மாயூரம், மற்றும் திருத்தணி ஆகிய இரண்டு இடங்களிலும் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கான உரிமம் கோரப்பட்டது. ஆனால், மைய அரசு சர்க்கரை ஆலைகளை அமைக்க உரிமம் வழங்கும் செயற் குறிப்பை ஒத்திபோட்டு விட்டது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, சர்க்கரை தொழிலில் மந்தம் ஏற்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மந்தம் ஏற்பட்டிருப்பதால், கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் சிரமத்திற்கு ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த ஆலைகளும் நெருக்கடிக்கும் உள்ளாகி இருக்கின்றன. இந்த விவசாயிகளையும், ஆலைகளையும் காப்பதற்கு அரசு ஏதாவது உதவி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படி நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உள்ளதா? உத்திரப்பிரதேசத்தில் சர்க்கரை ஆலைகளின் மூலம், மேலும் விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 15 ரூபாய் உதவியளித்து இருக்கிறார்கள். நம் தமிழ்நாடு அரசும் இதுசம்பந்தமாக, இந்த நெருக்கடியைத் தீர்க்க சர்க்கரை ஆலைகளுக்கும், கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிக்க என்ன உதவி செய்ய உத்தேசித்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலையில் சுமார் குவிண்டால் ஒன்றுக்கு 60 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. உத்திரப் பிரதேசத்தில் என்ன செய்கிறார்கள் என்ற தகவல் இல்லை. ஆனால், சர்க்கரை ஆலைகள் பெரும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிக்கின்றன என்பது உண்மை. 1977–78 ஆம் ஆண்டு மட்டும் 16·85 கோடி ரூபாய் தமிழக சர்க்கரை ஆலைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்திலிருந்து இந்தத் தொழிலை மீட்பதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆனால், உத்திரப் பிரதேசத்திற்கு மத்திய சர்க்கார் 20 கோடி ரூபாய் கொடுத்து உதவியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திற்கும் 10 கோடி கேட்டோம். 10 நாளில் பதில் வந்தது, ஆனால் இல்லை என்று.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: உத்திரப்பிரதேசத்திற்கு 20 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள், நமக்கு இல்லை என்றால் எங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா?

[1979 மார்ச் 17

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இப்போது துணைப் பிரதமராக பொறுப்பேற்றிருக்கும் சரண்சிங் அவர்கள் வந்தபிறகு மீண்டும் இதை வற்புறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறோம்.

திரு. என். கிட்டப்பா: இது மாயூரம் பற்றிய கேள்வி. மாயூரம் தொகுதி நீண்டகாலமாக தொழில் வளர்ச்சி இல்லாத பகுதியாக இருக்கும் காரணத்தால் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு இருக்கும் காரணத்தால் ஒராண்டில் பாதி நாட்களுக்குமேல் வேலை இல்லாத நிலையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் அடிப்படையில் சர்க்கரை ஆலை அமைக்கா விட்டாலும் அண்மையில் நம்முடைய அரசு அறிவித்திருக்கிற மினி சிமெண்ட் ஆலையாவது அமைக்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் புலியூரார் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அவர் என்ன சொல்லி என்னை அழைத்தாலும் ஊர் பெயர் சரிதான்— தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துச் சொல்ல முடியும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சர்க்கரை ஆலைகளில் நஷ்டம் என்றும் மந்தமாக இருக்கிறது என்றும் உத்திரப் பிரதேசத்திற்குக் கொடுத்திருக்கிற ரூபாய் 20 கோடி அல்ல, 22·30 கோடி ரூபாய் கொடுத்துள்ளதாக பாராளு மன்றத்தில் கேள்விக்குப் பதிலளிக்கும்போது தகவல் தந்திருக்கிறார்கள். எழுதினோம் பதில் இல்லை. கேட்டோம் கொடுக்கவில்லை என்று மட்டும் சொல்லிவிட்டால் அமைச்சராக இருந்து பயன் இல்லை. ஆகவே, உறுதியாக நின்று போராடி வாங்குவதற்கு இந்தச் சபையில் இருக்கும் எல்லாக் கட்சியினரும் ஆதரவாக இருப்பார்கள். உடனடியாக அதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் டில்லி சென்றிருந்தபோது மத்திய நிதியமைச்சரிடத்தில் இதைப் பற்றி வற்புறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் நிச்சயமாக ஒரு சம நீதி என்ற அடிப்படையிலாவது மாநில அரசு கேட்ட உதவியைத் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அவர்கள் தரமாட்டார்கள் என்ற நிலைமைக்குத் திடீரென்று சென்றுவிட வேண்டியதில்லை. வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம், நேரில் பேசி இருக்கிறோம், நல்ல நிலைமை உருவாகும் என்று எதிர்பார்க்கிறோம்.

1979 மார்ச் 17]

திரு. சி. ஆறுமுகம் : தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் எந்தெந்த ஆலைகளுக்கு நிதிப் பற்றாக் குறை ஏற்பட்டிருக்கிறது? அதைச் சரி செய்ய அவர்கள் அரசிடத்தில் மானியம் கேட்டிருக்கிறார்களா? எந்தெந்த ஆலைகளுக்கு மானியம் வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 11 ஆலைகள் வருகின்றன. கூட்டுறவு ஆலைகளும், பொதுத் துறை ஆலை களும் இருக்கின்றன. அந்த ஆலைகளில் ஏற்பட்ட நஷ்டம் வருமாறு—ஆம்பூர் 38.88 லட்சம் ரூபாய்; மதுராந்தகம் 103.97 லட்சம் ரூபாய்; அமராவதி 105·08 லட்சம் ரூபாய்; சேலம் 84.33 லட்சம் ரூபாய்; கள்ளக்குறிச்சி 81·79 லட்சம் ரூபாய்; நேஷனல் 140.75 லட்சம் ரூபாய்; தர்மபுரி 74.06 லட்சம் ரூபாய்; வேலூர் 142·31 லட்சம் ரூபாய்; திருப்பூர் 125.01 லட்சம் ரூபாய்; அறிஞர் அண்ணா 32.06 லட்சம் ரூபாய்; ஜவகர்லால் நேரு 73.23 லட்சம் ரூபாய். உடனடி யாக உதவி செய்யலாமா என்று மாநில அரசு யோசித்து 2 கோடி ரூபாய் கடனாக உதவலாமா என்று பரிசீலித்து வருகிறது.

திரு. சி. ஆறுமுகம் : யோசித்துக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த ஆலைக்கு எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இன்னும் எந்த ஆலைக்கும் வழங்கபபடவில்லை. வழங்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. வழங்குவது என்றால் 2 கோடி ரூபாய் கடனாகத்தான் வழங்கப்படும்.

* வினா எண் 441— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், மானாமதுரை பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று ஆரம்பிப்பதாக அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது . எந்த இடத்தில் ஆரம்பிக் கப்படும். ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.